# C.S.I TAMIL CHURCH - OMAN

# "பாலைவன மன்னா"




**மன்னா – 11 ஜுலை 2021 பிரதி – 4**



## ஆயர் மடல்



கிறிஸ்துவில் அன்புக்குரியோரே! இறை இயேசுவின் இனிய நாமத்தில் வாழ்த்துக்கள்.

“கர்த்தரை நம்புகிறவன் பாக்கியவான்” என்னும் திருவசனத்தை உறுதியாய் பிடித்து நம்பிக்கையோடு புதிய மாதத்துக்குள் பிரவேசிக்க அன்பாய் அழைக்கிறேன். திருச்சபை மக்களாக, குடும்பங்களாக, ஐக்கியமாக கைகோர்த்துக்கொண்டு ஓமான் தேசத்திற்காக பாரத்தோடு ஜெபிக்கும் நாட்களாக ஒருவருக்கொருவர் விசாரித்தும், உதவி செய்தும், தாங்கும் நாட்களாக இந்நாட்களை பயன்படுத்திக்கொள்வோம். கிறிஸ்துவில் வெளிப்பட்ட மனதுருக்கம் நம்மில் வெளிப்படவும், இறை நம்பிக்கையும் பற்றுறுதியும் நம் வார்த்தைகளிலும், வாழ்விலும் வெளிப்படவும் அன்போடு கேட்கிறேன்.

### இழப்புகள் இறுதியாகட்டும்:-

நமது திருச்சபை பல குடும்பங்களில் பெற்றோரை இழந்திருக்கிறது. அருமையான சகோ. லாட்சன், சகோ. இம்மானுவேல் பிரின்ஸ், சகோ. டேவிட் சுந்தர் சிங் ஆகிய அன்புக்குரியோரை இழந்துள்ளோம். அனைத்து குடும்பங்களின் ஆறுதலுக்காய் பாரத்தோடு ஜெபிப்போம். இத்தோடு இழப்புகள் இறுதியாகட்டும் என்ற மன்றாட்டோடு இருப்போம்.

### இன்னல்கள் இல்லாமற்போகட்டும்:-

இந்நாட்களில் பல குடும்பங்கள் வைரஸ் தாக்கத்தினால் பாதிக்கப்பட்டு இருப்பதையும், பாதிப்புகளில் இருந்து மீண்டிருப்பதையும் அறிகிறேன். வருமான இழப்புகள் ஏற்பட்டிருப்பதையும், வாழ்வாதாரங்கள் நலிந்திருப்பதையும் உணர்கிறேன். நமது இல்லங்களில் இருந்து இன்னல்கள் இல்லாமற் போகட்டுமே என இறைவனை வேண்டுகிறேன்.

இறை நம்பிக்கையோடு வாழ்வை தொடரவும். திருச்சபை ஐக்கியத்தில் இணைந்து செயல்படவும் கர்த்தராகிய ஆண்டவர் அனைத்து ஆற்றலையும், ஆலோசனைகளையும் தந்து பாதுகாப்பாய் வழிநடத்துவாராக. ஆமென்!

**அன்புடன் போதகர்,**

**Rev. Dr. N. ஜெசின்**

# ஆயர் அருளுரை

## நற்சிந்தை

**“கிறிஸ்து இயேசுவிலிருந்த சிந்தையே உங்களிலும் இருக்கக்கடவது” (பிலிப்பியர் 2:5)**

நற்சிந்தை என்னும் தலைப்பின் வழியாய் உங்களை சந்திப்பதில் மகிழ்ச்சி. இம்மாதம் நம்முடைய சிந்தைகளை ஒருமுகப்படுத்தி இறைவார்த்தைகளை சிந்திக்க முயல்வோம். ஓர் உண்மை நிகழ்வினூடாக கற்றுக்கொள்வோம்.

### i. எண்ணத்தில் நற்சிந்தை:-



இது ஓர் ஓட்டப்பந்தயப் போட்டி. இந்த ஓட்ட பந்தயப் போட்டியில் முதலில் இருப்பவர் கென்யாவின் ஆபேல். அவருக்கு பின்னால் இருப்பவர் ஐவன் பெர்னான்டெஸ் ஸ்பெயின் நாட்டைச் சேர்ந்தவர். பந்தயத்தின் இறுதிச் சுற்றில் சில அடிகளே பாக்கி இருக்கும் நிலையில் ஆபேல் எல்லைக் கோட்டை கடந்துவிட்டோமென்று (எல்லையில் வரைந்த கோட்டின் குழப்பத்தில்) நினைத்துக்கொண்டு நின்று விடுகிறார்.

ஆனால் அவருக்குப் பின்னால் வந்த ஐவன் பெர்னான்டெஸோ ஸ்பெயின் மொழியில் அவரை இன்னும் சில அடிகள் உள்ளன. “இது அல்ல முடியும் எல்லை” என்று கூச்சலிடுகிறார். ஆபேலுக்கு ஸ்பெயின் மொழி தெரியாததால் அவரும் நின்றுவிட, பின்னால் வந்த ஐவன் பெர்னான்டெஸோ அவரை முன்னுக்குத் தள்ளி எல்லையைக் கடக்க வைக்கிறார்.

போட்டி முடிந்து பத்திரிக்கை நிருபர்கள் ஐவன் பெர்னான்டெஸை நீங்க ஏன் இப்படி செய்தீர்கள் நீங்கள் முதலிடத்திற்கு வந்து இருக்கலாமே என்று கேட்க, அது ஒரு வெற்றி ஆகாது. உண்மையான வெற்றியாளன் ஆபேல் மட்டுமே, எல்லையில் வரைந்த கோட்டின் குழப்பத்திலேயே ஆபேல் நின்று விட்டார். அவரை முந்தி நான் வெற்றி பெற்றிருந்தேன் என்றால் எனது தாய் அதை சத்தியமாக ஏற்றுக்கொள்ளமாட்டார்கள் என்று சொல்லி விடைபெற்றார்.

நமக்கு இந்த எண்ணமிருக்குமா? நம்மை நாமே சிந்தித்துப் பார்ப்போம். யாரையும் ஏமாற்றலாமென்று நினைத்து வாழ்க்கையை ஓட்டிக்கொண்டு இருக்காமல், நமது பிள்ளைகளுக்கு நேர்மையையும், உண்மையையும், சிறந்த ஒழுக்கத்தையும் கற்றுத்தருவோம். யாரையும் ஏமாற்றி வெற்றி பெறக்கூடாது என்று சொல்லித்தருவோம். ஏனென்றால் அதுதான் கிறிஸ்துவின் சிந்தை. பிலிப்பியர் 2:4-ல் "அவனவன் தனக்கானவைகளையல்ல பிறருக்கான வைகளையும் நோக்குவானாக".

மனித வாழ்வு ஒரு ஓட்டப்பந்தயம் போன்றது. இவ்வாழ்வு கிறிஸ்துவிடம் என்னை வழிநடத்தியது என்னும் மகிழ்ச்சியே நிலையான மகிழ்ச்சி என திருமறை நமக்குப் போதிக்கிறது. எனவேதான் அப்போஸ்தலனாகிய பவுல் பிலிப்பியர் 2:14-ல், "நான் வீணாக ஓடினதும் வீணாக பிரயாசப் பட்டதுமில்லையென்கிற மகிழ்ச்சி கிறிஸ்துவின் நாளில் எனக்கு உண்டாயிருப்பதற்கு.."

எனவே பிரியமானவர்களே! நமது சிந்தை கிறிஸ்து விரும்பும் நற்சிந்தையாக அமைய வேண்டும்.

"சிறுமைப்பட்டவன்மேல் சிந்தையுள்ளவன் பாக்கியவான்; தீங்குநாளில் கர்த்தர் அவனை விடுவிப்பார்" (சங்கீதம் 41:1). நம்முடைய சிந்தையில் தெளிவு வேண்டும். என்றால் மட்டுமே நாம் விடுதலை பெற இயலும்.

1. மாம்ச சிந்தை – மரணம்
2. ஆவியின் சிந்தை – ஜீவனும் சமாதானமும்

} ரோமர் 8:6

"மாம்ச சிந்தை தேவனுக்கு விரோதமான பகை, அது தேவனுடைய நியாயப்பிரமாணத்துக்கு கீழ்ப்படியக் கூடாமலும் இருக்கிறது. (ரோமர் 8:7). மாம்ச சிந்தை இறைவனை விட்டு நம்மை தூரப்படுத்துகிறது என்பதை புரிந்துக்கொள்வோம்.

### ii. இருதயத்தில் நற்சிந்தை:-

நற்சிந்தை அல்லது துர்சிந்தை எங்கிருந்து வெளிவருகிறது என்றால் இருதயத்திலிருந்து என திருமறை கூறுகிறது.

"என் இருதயத்தில் அக்கிரம சிந்தை கொண்டிருந்தேனானால் ஆண்டவர் எனக்குச் செவிகொடார்" (சங்கீதம் 66:18).

ஒரு கிளி இருந்ததாம். அது எப்பவுமே எல்லாரையும் கொத்திக்கொண்டே இருக்குமாம். இதனால் அந்தக் கிளியின் எஜமான் அந்த கிளியிடம் இனி நீ யாரையும் கொத்தக்கூடாது, யாரையும் காயப்படுத்தக்கூடாது என்று

சொல்லி காலை முதல் மாலை வரை இனி யாரையும் கொத்தமாட்டேன் என சொல்ல சொல்லி பயிற்சி கொடுத்தாராம். கிளியும் காலை முதல் இரவு வரை நான் யாரையும் கொத்தமாட்டேன் என சொல்லிக் கொண்டே இருந்ததாம். ஆறு மாதங்களாய் இப்படி அந்த கிளிக்கு பயிற்சி கொடுக்கப்



பட்டதாம். ஆறு மாதங்களுக்குப் பின்பு அந்த எஜமானர் ஆறு மாதங்கள் பயிற்சி கொடுத்துவிட்டோம் என்று அந்தக் கிளி பக்கத்தில் போய் கிளியை தூக்கி கொஞ்ச ஆரம்பித்தாராம். அந்தக் கிளி அவருடைய முகத்தில் கொத்தி விட்டதாம், அவர் மருத்துவமனைக்கு போக வேண்டிய சூழ்நிலையும் ஏற்பட்டதாம்.

இதே மாதிரிதான் நம் நாவும், சிந்தையும் கூட. திருமறை கூறும்போது நம்முடைய வார்த்தையும், சிந்தையும் இருதயத்தில் இருந்து புறப்படுகிறது. அதனால்தான் நம் இருதயம் அழுக்கால் பாவத்தால் நிறைந்திருக்கும்போது இருதயத்திலிருந்து புறப்பட்டு வாயினால் வரும் வார்த்தைகளும் கடுமையான சொற்களாகத்தான் இருக்கும். மற்றவர்களுக்குத் தீங்கு விளைவிக்கும் சிந்தைகளாகத்தான் இருக்கும் என திருமறைச் சுட்டிக்காட்டுகிறது.

வாயிலிருந்து புறப்படுகிறவைகள் இருதயத்திலிருந்து புறப்பட்டு வரும்; அவைகளே மனுஷனை தீட்டுப்படுத்தும். எப்படியெனில், இருதயத்திலிருந்து பொல்லாத சிந்தனைகளும், கொலைபாதகங்களும், விபசாரங்களும், வேசித்தனங்களும், களவுகளும், பொய்ச்சாட்சிகளும் தூஷணங்களும் புறப்பட்டுவரும் (மத்தேயு 15:18,19).

அதனால் நாம் நம் இருதயத்தின் சிந்தைக் குறித்து மிகக் கவனமாக இருக்கவேண்டும். ஆண்டவருக்குப் பிரியமில்லாத காரியங்களை எப்போதும் பேசக்கூடாது. நம்முடைய வார்த்தைகளை இருதயத்தில் கவனமாக யோசித்து, சிந்தித்து பேசும்போது மற்றவர்களுக்கு ஆசீர்வாதத்தைக்கொண்டு வருகிற வார்த்தைகளாய் இருக்கும்.

அந்தக் கிளிக்கு யாரையும் கொத்தக்கூடாது என்று மூளையில் பதிந்து இருந்தது. ஆனால் அந்தக் கிளி செய்தது என்னவென்றால் தன் இருதயத்தின் இயல்பைதான் வெளிப்படுத்தியது. அதே மாதிரிதான் நாமும்கூட, சில சமயங்களில் கெட்ட வார்த்தைகள் பேசக்கூடாது, கடும்

சொற்கள் பேசக்கூடாது அப்படின்னு நினைக்கிறோம். ஆனால் நம் இருதயத்தில் பாவம் நிறைந்திருப்பதால் நம் நாவில் இருந்து தவறான வார்த்தைகள் வெளிப்பட்டுவிடுகிறது.

“இருதயத்தின் நிறைவினால் வாய் பேசும்” (மத்தேயு 12:34).

இதற்கு நாம் என்ன செய்யவேண்டும் என்றால், தேவனுடைய வசனத்தால் நம்முடைய இருதயத்தை நிரப்பும்போது, ஆண்டவருடைய வார்த்தைகளை எப்போதுமே தியானிக்கும்போதும் நாம் நல்ல வார்த்தைகளை வெளிப்படுத்த முடியும்.

தேவனிடத்தில் சேருங்கள், அப்பொழுது அவர் உங்களிடத்தில் சேருவார். பாவிகளே உங்கள் கைகளைச் சுத்திகரியுங்கள்; இருமனமுள்ளவர்களே, உங்கள் இருதயங்களைப் பரிசுத்தமாக்குங்கள் (யாக்கோபு 4:8).

அப்பொழுது எல்லா புத்திக்கும் மேலான தேவசமாதானம் உங்கள் இருதயங்களையும், உங்கள் சிந்தைகளையும் கிறிஸ்து இயேசுவுக்குள்ளாகக் காத்துக்கொள்ளும் (பிலிப்பியர் 4:7).

புதிய மாதத்தின் புதிய ஆசிகள் உங்களை வந்தடைவதாக.

**அன்புடன் போதகர்**
**Rev. Dr. N. ஜெசின்**

## சிறுவர் பகுதி

### “திறந்த வாசல்”

உன் கிரியைகளை அறிந்திருக்கிறேன்; உனக்குக் கொஞ்சம் பெலன் இருந்தும், நீ என் வசனத்தைக் கைக்கொண்டபடியினாலே, இதோ திறந்த வாசலை உனக்கு முன்பாக வைத்திருக்கிறேன். அதை ஒருவனும் பூட்டமாட்டான் (வெளி 3:8).




ஒரு அரசன் தன்னுடைய அரண்மனைக்கு ஒரு பிரதம மந்திரி தேவையாயிருந்தபடியால் அதற்கான சரியான ஒரு மனிதனை தேடினார். தேடி தேடி கடைசியில் மூன்று பேரை கண்டுபிடித்து, அவர்களில் யார் மிகவும் புத்திசாலியாக இருக்கிறார்களோ, அந்த மனிதனை பிரதம மந்திரியாக்க தீர்மானித்தார். அதன்படி, ஒரு கதவில் ஒரு பெரிய பூட்டை

உண்டு பண்ணி அதை மாட்டி, யார் முதலில் கதவை திறக்கிறார்களோ, அவர் பிரதம மந்திரியாவார் என்று அறிவித்தார். அதன்படி, மூவரும் அதை திறப்பதற்கு முயற்சித்தார்கள். அவர்களில் இருவர், தங்களுக்குத் தெரிந்த கணக்கு எல்லாம் போட்டுப் பார்த்து, எப்படி திறப்பது என்ற மண்டையை உடைத்துக் கொண்டிருந்தார்கள்.

மூன்றாவது மனிதனோ, ஒன்றும் செய்யாமல் ஒரு நாற்காலியில் அமர்ந்து எதையோ யோசித்துக்கொண்டிருந்தார். சற்றுநேரம் கழித்து மற்ற இருவரும் இன்னும் எப்படி திறப்பது என்று மண்டையை உடைத்து கொண்டிருந்தபடியால், இவர்போய் அந்த கதவின் கைப்பிடியைத் தொட்டார். உடனே கதவு திறந்துகொண்டது. இந்த கதவு பூட்டப்படவேயில்லை.

இந்நாளிலும் தேவன் நமக்கு முன்பாக திறந்த வாசலை வைத்திருக்கிறார். ஆனால் நாம் அதை திறக்கக்கூடாதபடிக்கு, பயம், அவிசுவாசம், அறியாமை, பெருமை போன்ற அநேக பூட்டுகள் இருக்கின்றன. ஆனால் அது பூட்டப்படாமல் இருக்கிறது என்பதை நாம் அறியாமல் இருக்கிறோம். விசுவாசத்தோடு நாம் அதைப்போய் திறந்தால் வெற்றி, நல்ல நிலமை, நல்ல சந்தர்ப்பங்கள் என்று அநேக காரியங்கள் காத்திருக்கின்றன. உங்கள் வாழ்க்கையிலும் பூட்டப்பட்ட கதவுகள் இருக்கின்றனவா? விசுவாசத்தோடு திறவுங்கள். நல்ல வேலைக்காக காத்திருக்கிறீர்களா? என் தேவன் எனக்கு திறந்த வாசலை வைத்திருக்கிறார் என்று விசுவாசத்தோடு அறிக்கை செய்து முயற்சி செய்யுங்கள். அப்படி நமக்கு தேவையான காரியங்களை ‘தேவனே நீர் எனக்கு இந்த காரியத்திற்காக திறந்த வாசலை வைத்திருப்பதற்காக உமக்கு ஸ்தோத்திரம்’ என்று விசுவாத்தோடு திறவுங்கள். கர்த்தர் நமக்கு கிருபை செய்வார். ஒருவழி அடையும்போது தமது பிள்ளைகளுக்காக புது வழியை திறக்கிற ஆண்டவர் நாம் விசுவாசிக்கிற தேவனல்லவோ! தாவீதின் திறவுகோலை உடையவரும், ஒருவரும் பூட்டக்கூடாதபடிக்குத் திறக்கிறவரும், ஒருவரும் திறக்கக்கூடாதபடிக்குப் பூட்டுகிறவருமாயிருக்கிறவர் என்று நம் தேவனுக்கு ஒரு நாமம் உள்ளது. அவர் திறந்தால் யாரும் பூட்டமுடியாது. அவர் பூட்டினால் யாரும் திறக்கமுடியாது.

**அன்புடன் போதகர்**

## பிறருக்கானவைகளை நோக்குதல்

“அவனவன் தனக்கானவைகளையல்ல, பிறருக்கானவைகளையும் நோக்குவானாக” (பிலிப்பியர் 2:4).



ஒரு பழங்கால கதை ஒன்று உண்டு. ஒரு பெண் தன் ஒரே பிள்ளையை இழந்து போனாள். அந்த துக்கத்தில் ஒரு குருவிடம் சென்று, தன் பிள்ளையை மீண்டும் எழுப்பித் தரும்படி கேட்டாள். அவர் அவளை நீண்ட நேரம் உற்றுப் பார்த்துவிட்டு, கனிவுடன் மகளே, நீ போய் மரணம் ஒரு காலமும் ஏற்பட்டிராத ஒரு வீட்டிலே ஒரு கைப்பிடியளவு அரிசி வாங்கி வா, நான் நீ கேட்பதை செய்துவிடுகிறேன் என்றார். அவள் ஒவ்வொரு வீடாக சென்று, உங்கள் வீட்டில் எப்போதாவது யாரையாவது இழந்ததுண்டா? என்று கேட்டுக்கொண்டே வந்தாள். அவள் எவ்வளவோ தேடி சுற்றினாலும், எல்லா வீடுகளிலுமே மரணத்தின் சுவடுகள் இருந்தன.

எல்லா வீடுகளிலும் காணப்பட்ட துயரை கண்ட அவளது கவலை கொஞ்சம் கொஞ்சமாக குறைய ஆரம்பித்தது. தன்னுடைய வேதனையை மட்டும் எண்ணி நொந்துபோன அவளது இதயத்தின் வலி சற்று குறைந்து, பிறரின் துக்கத்திற்காய் அனுதாபப்படும் உள்ளம் பெற்றாள். பிறரை ஆறுதல்படுத்துவதில் தன் துயரை மறந்தாள்.

வேதத்திலே ஒரு சம்பவம் உண்டு. தேசத்திலே நிலவிய பஞ்சம் காரணமாக நகோமி எலிமலேக்கு தம்பதியினர் மோவாப் தேசத்திற்கு செல்கின்றனர். அங்கே குடியிருந்து தன் இரு மகன்களுக்கும், அங்கேயே பெண் எடுக்கின்றனர். எதிர்பாராதவிதமாக நகோமி தன் கணவனையும், இரு மகன்களையும் இழந்து விடுகிறாள். இப்போது தன் தேசத்திற்கு திரும்புகிறாள். அவளுடன் இரு மருமகள்களும் வருகின்றனர். அவர்கள்

இருவரையும் தகப்பன் வீட்டிற்கு போகும்படி வேண்டுகிறாள். அதில் மூத்தவள் தன் எதிர்காலத்தை எண்ணி புதுவாழ்க்கை அமைத்து கொள்ளலாம் என்று சென்றுவிட்டாள். ஆனால் இளைய மருமகள் ரூத்தோ தன் மாமியாரை விடவில்லை.

"உம்மோடே வருகிறேன்" என தன் வாழ்வை குறித்து சிறிதும் யோசிக்காமல் கிளம்பினாள். என் மாமி எல்லாவற்றையும் இழந்து வெறுமையாய் செல்கிறார்களே, அவர்களது வெறுமையை நிரப்ப நான் அவர்களோடு செல்வேன், என் மாமியாருக்கு ஆறுதலாய் இருப்பேன், என எண்ணியவளாக தன் துன்பத்தை மறந்து மாமியாரோடு செல்கிறாள் ரூத். தனக்கானதை அல்ல, பிறருக்கானவைகளையும் நோக்கின ரூத், இயேசு கிறிஸ்துவின் வம்ச வரலாற்றில் இடம்பெற்று இயேசு கிறிஸ்துவின் பாட்டியானாள்.

பிரியமானவர்களே! தீர்க்கமுடியாத வியாதி, எதிர்பாராத மரணம் நம் இருதயத்தை சுக்கு நூறாக உடைத்துவிடும் என்பது உண்மையே. உலகமே இருண்டு விடும், வாழ்க்கை கேள்விக்குறியாக மாறும், விரக்தி ஏற்படும். இவை எல்லாம் நூற்றுக்கு நூறு உண்மையே! இந்த சூழ்நிலையில் நம் துயரை மட்டுமே எண்ணி எண்ணி முடங்கி விடுவோமானால், நமது நிலை பரிதாபமே. அதே வேளையில் பிறர் மீதும் அக்கறை கொண்டு, கனிவாக விசாரித்து அவர்களின் துயரத்தில் நம்மால் இயன்ற உதவிகளை செய்து ஆறுதல் அளிப்போமானால், நமது துக்கம் மறந்து துரும்பாக மாறும் என்பது உண்மை. காலப்போக்கில் நமது துயரையே மறந்து விடுவோம். ஆகவே நமது வீட்டிலுள்ள சிறுசிறு பிரச்சனைகளையும், துயரங்களையும் வீட்டிற்கு வரும் அனைவரிடமும் சொல்லி புலம்பிக் கொண்டேயிராமல், பிறரை அன்போடு விசாரித்து, ஆறுதல் சொல்லுங்கள். எனது சுமையை சுமந்ததுபோதும், பிறருக்கு ஆறுதலாய் வாழ்வேன் என முடிவெடுங்கள். ஒரே ஒரு வாழ்வு, அதை சுயநலமாயல்ல, பிறர் நலனுக்காய் வாழ்வேன் என தீர்மானியுங்கள். சுவையற்ற இருண்ட உங்கள் வாழ்வு சுகமாய் மாறிவிடும். ஆமென் அல்லேலூயா!

**அன்புடன் பெண்கள் சங்க தலைவி,**
**திருமதி D. ஷர்மிளா ஜெசின்**

## துக்கம் பகிர்வோம்

### கிறிஸ்து எனக்கு ஜீவன், சாவு எனக்கு ஆதாயம்

நமது சபை அங்கத்தினர் **திருமதி. புஷ்பராணி மூர்த்தி** அவர்களின் தந்தை **திரு. தங்கராஜ் (வயது 75)** அவர்கள் ஜுன் மாதம் 4-ம் தேதி கிறிஸ்துவுக்குள் இறை அழைப்பைப் பெற்றார்கள். தங்கள் தந்தையை இழந்து தவிக்கும் குடும்பத்திற்கு கடவுள் ஆறுதலையும், சமாதானத்தையும் அருள்வாராக.

நமது சபை துவங்கியவர்களில் ஒருவரும் முன்னாள் பொருளாளருமான **திரு. A. டேவிட் சுந்தர் சிங் (வயது 57)** அவர்கள் ஜுன் மாதம் மாதம் 26-ம் தேதி கிறிஸ்துவுக்குள் இறை அழைப்பைப் பெற்றார்கள். அவரை இழந்து தவிக்கும் குடும்பத்திற்கு கடவுள் ஆறுதலையும், சமாதானத்தையும் அருள்வாராக.

## திருமறைப்பாடம் வாசிப்பவர்கள் ~ ஜுலை 2021

| | | |
|---|---|---|
| 02-07-2021 | முதலாம் திருமறைப்பகுதி | Miss. Jerlin Stelina Martin |
| | இரண்டாம் திருமறைப்பகுதி | Mr. Berkins |
| 09-07-2021 | முதலாம் திருமறைப்பகுதி | Mrs. Jeya Rani Victor |
| | இரண்டாம் திருமறைப்பகுதி | Mr. Bravin |
| 16-07-2021 | முதலாம் திருமறைப்பகுதி | Josephin Anto Kingston |
| | இரண்டாம் திருமறைப்பகுதி | Mr. Dinakaran |
| 23-07-2021 | முதலாம் திருமறைப்பகுதி | Mrs. Mahizha Jenkin |
| | இரண்டாம் திருமறைப்பகுதி | Mr. Gnana Ruban |
| 30-07-2021 | முதலாம் திருமறைப்பகுதி | Mrs. Mary Praveena Gobinath |
| | இரண்டாம் திருமறைப்பகுதி | Mr. Gnanadhas |
| 06-08-2021 | முதலாம் திருமறைப்பகுதி | Mrs. Nisha Broosewelt |
| | இரண்டாம் திருமறைப்பகுதி | Mr. Isaac Solomon |

## என் ஆண்டவரே!



**மண்ணில்** :
**விண்ணில்** : 72
**ஊர்** :
**நாடு** : யூதேயா
**தரிசன பூமி** : இந்தியா

இயேசு கிறிஸ்துவின் சீடர்களில் ஒருவர் தோமா. இரட்டையன் என்று பொருள்படும் இவரை யூதா தோமா என்று அழைத்தனர்.

இயேசுகிறிஸ்து தான் உயிர்த்தெழுந்த நாளன்று மாலையில் அப்போஸ்தலர்களுக்குக் காட்சியளித்தார். அப்போது அவர் இக்கூட்டத்தில் இல்லை. எனவே இயேசுவின் உயிர்த்தெழுதலை நம்பாமல், அவருடைய விலாவில் என் கையை இட்டால் ஒழிய, நான் விசுவாசிக்கமாட்டேன் என்றார். எட்டு நாளைக்குப் பின்பு சீடர்கள் மத்தியில் இயேசு வந்து நிற்க, தோமாவை நோக்கி, "உன் கையை நீட்டி என் விலாவில் இடு, விசுவாசங்கொள்" என்று அழைத்தார்.

அப்போஸ்தலர்கள் வெவ்வேறு நாடுகளுக்குப் பணிபுரியச் சென்றபோது, தோமா இந்தியா வந்தார். உறப்பான் என்னும் வணிகரே அவரை இந்தியாவிற்கு அழைத்து வந்ததாகக் கூறப்படுகிறது. இந்தியாவின் அரசன் கொண்டேபோர்ஸ்க்கு இவரை அறிமுகம்செய்து வைக்கவே, அரசன் தோமாவை அழைத்து தனக்கு ஒரு அழகிய அரண்மனை கட்டித்தர வேண்டுமெனக் கேட்டு ஒரு பெருந்தொகையை கொடுத்தான்.

தோமாவோ, அந்தப் பணத்தைக்கொண்டுபோய் ஏழை எளியவர்களுக்குக் கொடுத்து நற்செய்தி அறிவித்தார். சில மாதங்களுக்குப் பிறகு வந்த அரசன் நடந்ததை அறிந்து கோபங்கொண்டு, தோமாவையும், வியாபாரியையும் கொலைசெய்ய உத்தரவிட்டான். அச்சமயத்தில் அரசனின் சகோதரன் நோயுற்று மரிக்கவே, வானதூதர்கள் அவனிடம் தோமா கட்டிய அரண்மனையைக் காண்பித்தனர். பின்பு அவர் உயிர்பெற்று எழுந்து நடந்ததை விளக்கிக் கூறவே, அரசன் மனந்திரும்பி ஞானஸ்நானம் பெற்றதாகக் கூறப்படுகின்றது.

கி.பி. 52-ம் ஆண்டு மலபார் பகுதிக்கு வந்த தோமா 7 திருச்சபைகளை நிறுவினார். பின்னர் மயிலாப்பூரில் நற்செய்தி அறிவிக்கும்போது கோவில்

பூஜாரிகள் அவரைக் கொலைசெய்ய முயற்சித்து இறுதியில் தோமையார் மலை என்ற இடத்தில் ஈட்டியால் குத்திக் கொன்றனர். சாந்தோம் பகுதியில் உள்ள 'தோமா நினைவிடம்' நம் விசுவாசத்தை பலப்படுத்துகின்றதாக அமைகின்றது.

அன்பரே! சுவிசேஷத்தை சுமக்கும் வீரராக நீங்கள் எப்பொழுது மாறப்போகிறீர்கள்?

**வாழ்விலிருந்து வாழ்வுக்கு:-** அவரோடு மரிக்கும்படி நாமும் போவோம் வாருங்கள் - தோமா

**குயவனின் கரங்களில்:-** ஆண்டவரே! உம்மைப் பின்பற்றிய சீடர்களைப்போல் நானும் உம்மைப் பின்பற்றிவர ஆயத்தமாயிருக்கிறேன்.

**தியானத்திற்கு:-** 1சாமுவேல் 15, ஏசாயா 59, மத்தேயு 3-4

# *New Arrivals*

## "பிள்ளைகள் கர்த்தரால் வரும் சுதந்திரம்"



**Master. Ephraim Daniel**
**S/o Mr. Srinivas & Mrs. Synthia**
**01-06-2021**

**Miss. Annliya Keren Dani**
**D/o Mr. Austin Daniel Raj & Mrs. Ancy**
**14-06-2021**

## வரவேற்கிறோம்!

கடந்த மாதங்களில் நமது சபை ஐக்கியத்தில் புதிய அங்கத்தினர்களாக இணைந்த உங்களை கிறிஸ்துவின் நாமத்தில் அன்புடன் வரவேற்கிறோம்.

| Name | Native Place | Area |
|---|---|---|
| Mr. P. Sathish Kumar | Padanthalumoodu | Ghoubra |
| Mrs. N. Angel Shiny | Padanthalumoodu | Ghoubra |
| Miss. S. Esther Natasha | Padanthalumoodu | Ghoubra |

## நற்சிந்தனையின் பண்புகள்

### 1. கறையற்ற கையினாயிருத்தல்:-

**“சுத்தமான கைகளுள்ளவன் மென்மேலும் பெலப்படுவான்”**

யோபு தனக்கு மரணம் அருகில் இருப்பதாக உணர்ந்தாலும், இறைவனிடமிருந்து பிரிந்து வாழ்வதை விரும்பவில்லை. நல் ஆலோசனைகளைத் தராத நண்பர்கள் தங்கள் கருத்தையே திணிக்கும் நிலையிலிருப்பதால் இறைவனே தன் சார்பில் நின்று கை கொடுக்க வேண்டும் (யோபு 17:3) என்று கேட்கின்றார். நண்பர்களின் அறிவு இறைவனால் தடைபட்டுள்ளபடியால் அவர்கள் தன்னை வெற்றிக் கொள்ள இயலாது (யோபு 17:4) என்றும் அவர்கள் யோபுவின் மனதைப் புண்படுத்தி அதன் மூலம் தங்களையே ஆறுதல்படுத்திக் கொண்டதால் தீங்குறுவர் (யோபு 17:5) என்று புலம்புகிறார். மேலும் துன்பத்தின் விளைவுகளைக் கூறி முறையிடுகின்றார் (யோபு 17:6,7).



இவ்வாறான ஒரு இக்கட்டான துன்பச் சூழலிலும் கூட நம்பிக்கை அற்றுபோன நிலமையிலும் யோபுவின் ஆழ்மனதிலுள்ள இறை நம்பிக்கையில் வெளிப்படும் வார்த்தைதான், **“நீதிமான் தன் வழியை உறுதியாய் பிடிப்பான் சுத்தமான கைகளுள்ளவன் மேன்மேலும் பெலப்படுவான்”** என்பது.

சங்கீதக்காரர் தாவீது தன் பாடலிலே, “யார் கர்த்தருடைய பர்வதத்தில் ஏறுவான்? யார் அவருடைய பரிசுத்த ஸ்தலத்தில் நிலைத்திருப்பான்? என வினா எழுப்பி, **“கைளில் சுத்தமுள்ளவன்”** என்று கூறுகின்றார். இறைவாக்காளர் ஏசாயா **பரிதானங்களை வாங்காதவன்** உயர்ந்த இடங்களில் வாசம்பண்ணுவான், கன்மலைகளின் அரண்கள் அவனுடைய உயர்ந்த அடைக்கலமுமாகும். அவன் அப்பம் அவனுக்கு கொடுக்கப்படும்: அவன் தண்ணீர் அவனுக்கு நிச்சயமாகக் கிடைக்கும் என்கிறார். (ஏசாயா 13:15,16)

நம் அன்றாட வாழ்வில் யோபுவைப் போன்ற நெருக்கங்களிலும், வேதனைகளிலும், நண்பர்கள் ஏளனம் செய்யும் சூழல்களிலும் நம் கரங்கள் கறைபட்டு போகாமல் காத்துக் கொண்டால் நிறை வாழ்வை கடவுளிடமிருந்து பெற்றுக்கொள்வோம். கறையற்ற கையுடையவர்களாய் வாழ்ந்தால் கனிவாய் கடவுள் நம்மை பிடித்து வழி நடத்துவார்.

## 2. வலுப்படுத்தும் சொற்களுடையவர்களாயிருத்தல்:-

**“என் உதடுகளின் அசைவு உங்கள் துக்கத்தை ஆற்றும்”**

வார்த்தையும் வாழ்வும் ஒன்றுக்கொன்று தொடர்புடையவை. “உன் சொற்களைக்கொண்டு உன் உணர்ச்சிகள் மதிக்கப்படுகிறது. உன் உணர்ச்சிகளைக்கொண்டு உன் செயல் மதிக்கப்படுகிறது” என சாக்ரடீஸ் கூறுகிறார். ஒருவருடைய வார்த்தை வாழ்வுக்கு ஆதாரமாக இருக்கிறது.

இங்கு யோபு என் உதடுகளின் அசைவு அதாவது என் வார்த்தைகள் உங்கள் துக்கத்தை ஆற்றும் என்கிறார். மிகுந்த துயரத்தில் இருந்த யோபு தமது நண்பர்களின் ஆறுதல் நிறைந்த அறிவுரைகளால் மேலும், மேலும் நொறுக்கப்பட்டார். மிகுந்த வேதனையின் சூழலில் இருந்த யோபு தமது நண்பர்களுக்கு ஆறுதல் வழங்க வேண்டிய முறைகளைப் பற்றிக் கூறுகின்றார்.

யோபு சுகமாய் இருக்கும் போது உண்மையில் பிறருக்கு ஆறுதல் நல்கினார். (யோபு 4:34, 29:12-16) ஆகவே நண்பர்களின் வார்த்தைகள் ஆறுதல் தருவனவாயும், வலுவிழந்து வாழ்வோர்க்கு வலுவூட்டுகின்றனவாகவும் இருக்க வேண்டும். என் வார்தைகள் அத்தகையதாய் இருந்தது என்று சான்றும் பகர்கின்றார்.

இறைவாக்காளர் “தளர்ந்த கைகளைத் திடப்படுத்தி தள்ளாடுகிற முழங்கால்களைப் பலப்படுத்துங்கள்”. மனம் பதறுகிறவர்களைப் பார்த்து நீங்கள் பயப்படாதிருங்கள் திடன் கொள்ளுங்கள். இதோ உங்கள் தேவன் நீதியைச் சரிக்கட்டவும் உங்களுக்குப் பதிலளிக்கவும் வருவார். அவர் வந்து உங்களை இரட்சிப்பார் என்று சொல்லுங்கள் (ஏசா35:3,4) என்று கடவுளின் வார்த்தையை உரைக்கின்றார். உங்கள் சொற்கள் வாழ்வு தருகின்றதாகவும், வலுவூட்டுகின்றதாகவும் இருக்கவேண்டும் என்கிறார். ஆண்டவர் இயேசு கிறிஸ்துவின் வார்த்தைகள் ஒவ்வொன்றும் மனுக்குலத்திற்கு வாழ்வு தருகின்றதாக இருக்கின்றது. நூற்றுக்கு அதிபதி தன் வேலைக்காரனின் சுகத்திற்காக வேண்டுகின்றபோது, “ஆண்டவரே நீர் வருத்தப்பட வேண்டாம் நீர் என் வீட்டு வாசலுக்குள் பிரவேசிக்க நான் பாத்திரன் அல்ல. நான் உம்மிடத்தில் வரவும் என்னை பாத்திரனாக எண்ணவில்லை. ஒரு வார்த்தை மாத்திரம் சொல்லும் அப்பொழுது என் வேலைக்காரன் சொஸ்தமாவான்” (லூக் 7:6,7) என்று வேண்டுவதினால் இயேசு கிறிஸ்துவின் வார்த்தையிலுள்ள வலிமையையும் வல்ல செயலையும் நூற்றுக்கு அதிபதி அறிக்கை செய்கின்றார் எனலாம்.

இன்றைய இந்த காலகட்டத்தில் நம் வார்த்தைகள் வீணானதாக இருக்க வேண்டாம், வலுவற்றதாகவும் இருக்க வேண்டாம், பிறரை காயப்படுத்தும்

வார்ததையாகவும் இருக்க வேண்டாம். வலுவிழந்தோருக்கு வலுவூட்டுவனவாகவும், வாழ்விழந்தோருக்கு வாழ்வு தருவனவாகவும், பிறரது உள்ளக்காயங்களை ஆற்றுவனவாகவும் இருக்கட்டும். நாமும் வாழ்விழந்தவருக்கும், வேதனையிலிருப்போருக்கும் வலுப்பெறச் செய்யும் வார்த்தைகளைப் பேசி அவர்களை ஆறுதல் படுத்தும் வரத்தைப் பெற ஆண்டவரிடம் முறையிடுவோமாக. இறையருள் பெறுவோமாக.

- **V.G மஹிழா ஜெங்கின் ராஜ்**

## நிகழ்வும் பாடமும்

### இவர்களிடம் கேட்டுப் பாருங்கள்...

### நேரத்தின் மதிப்பை சொல்வார்கள்..!

- ஒரு மில்லி செகண்டின் மதிப்பை ஒலிம்பிக்கில் வெள்ளிப் பதக்கம் வாங்கியவரைக் கேட்டால் தெரியும்...!
- ஒரு செகண்டின் மதிப்பை விபத்தில் உயிர் தப்பியவரைக் கேட்டால் தெரியும்...!
- ஒரு நிமிடத்தின் மதிப்பை தூக்கிலிடப்படும் கைதியைக் கேட்டால் தெரியும்...!
- ஒரு மணி நேரத்தின் மதிப்பை உயிர் காக்க போராடும் மருத்துவரைக் கேட்டால் தெரியும்...!
- ஒரு நாளின் மதிப்பை அன்று வேலை இல்லாத தினக் கூலித் தொழிலாளரைக் கேட்டால் தெரியும்...!
- ஒரு வாரத்தின் மதிப்பை வார பத்திரிக்கை ஒன்றின் ஆசிரியரைக் கேட்டால் தெரியும்...!
- ஒரு மாதத்தின் மதிப்பை குறைப்பிரசவம் ஆகும் ஒரு தாயைக் கேட்டால் தெரியும்....!
- ஒரு வருடத்தின் மதிப்பை தேர்வில் தோல்வியுற்ற ஒரு மாணவனைக் கேட்டால் தெரியும்...!

நேரத்தை வீணாக்கும்போது கடிகாரத்தைப் பார். ஓடுவது முள் அல்ல..! உன் வாழ்க்கை.

## ஜுலை 2021 மாத கேள்விகள்

### (2கொரிந்தியர் 1 முதல் 10 முடிய)

1. சரீரத்தின் தோற்றம் எப்படிப்பட்டது?
2. தேவனால் கட்டப்பட்ட கைவேலையல்லாத நித்தியவீடு எங்கு இருக்கிறது?
3. கர்த்தரால் புகழப்படுகிறவன் யார்?
4. நம்மை அபிஷேகம் பண்ணினவர் யார்?
5. நித்தியமானவைகள் எவை?
6. பரிசுத்தவான்களுடைய குறைகளை தீர்க்கிறது எது?
7. கர்த்தருடைய ஆவி இருக்குமிடத்தில் என்ன உண்டு?
8. எதை தொடாதிருங்கள் என்று கர்த்தர் சொல்லுகிறார்?
9. யாரைக் குறித்தே மேன்மை பாராட்ட வேண்டும்?
10. நம்முடைய இருதயங்களில் கொடுக்கப்பட்டிருக்கிற அச்சாரம் எது?
11. நன்மை, தீமைக்கு பலனை அடைய எங்கு வெளிப்படவேண்டும்?
12. யாரை காணாததினால் ஆவிக்கு அமைதலில்லாதிருந்தது?
13. யார் யாருக்கு முன்பாக யோக்கியமானதை செய்யவேண்டும் என்று திருமறை கூறுகிறது?
14. எது கொல்லுகிறது? எது உயிர்ப்பிக்கிறது?
15. எது மரணத்தை உண்டாக்குகிறது?
16. தங்களுக்கே தங்களை ஒப்பிட்டுக்கொள்கிறவர்கள் யார்?
17. ஸ்தோத்திரங்களினால் பெருகுவது எது?
18. யாரிடத்தில் தேவன் பிரியமாயிருக்கிறார்?
19. கிறிஸ்துவுக்குள் இருந்தால் எப்படி இருக்கிறான்?
20. முக்காடு எப்போது எடுபட்டுப்போம்?

### ஜுன் 2021 மாத திருமறை அறிவு போட்டிக்கான விடைகள்

1. விசுவாசத்தினாலே – கலாத்தியர் 3:11
2. ஆவியினாலே நித்தியஜீவனை – கலாத்தியர் 6:8
3. பதினைந்து நாள் - கலாத்தியர் 1:18
4. மாம்சம் - கலாத்தியர் 5:17

5. சாத்தான் - 2கொரிந்தியர் 11:14
6. அரபிதேசத்திலுள்ள சீனாய் மலை – கலாத்தியர் 4:24
7. மத்தியஸ்தன் - கலாத்தியர் 3:20
8. மூன்றுதரம் - 2கொரிந்தியர் 12:7-8
9. நீதிமானாக்கப்படுவதில்லை – கலாத்தியர் 2:15
10. புளிப்புள்ள கொஞ்சமாவானது – கலாத்தியர் 5:9
11. விசுவாசமார்க்கத்தார்கள் - கலாத்தியர் 3:7
12. கர்த்தர் - 2கொரிந்தியர் 13:10
13. அன்பினால் - கலாத்தியர் 5:6
14. அரேத்தா ராஜாவினுடைய சேனைத்தலைவன் - 2கொரி. 11:32
15. பேதுரு – கலாத்தியர் 2:8
16. பரிசுத்த முத்தத்தோடு – 2கொரிந்தியர் 13:12
17. மரத்திலே தூக்கப்பட்டவன் - (கலாத்தியர் 3:13), வேறொரு சுவிசேஷத்தை பிரசங்கிப்பவன் (கலாத்தியர் 1:8-9)
18. கிறிஸ்துவினுடையவர்கள் - கலாத்தியர் 5:24
19. பெற்றோர்கள் - 2கொரிந்தியர் 12:14
20. வைராக்கியம் - கலாத்தியர் 4:18

## ஜுன் மாத திருமறை போட்டிக்கு சரியான விடை எழுதியவர்கள்

| | |
|---|---|
| Mrs. Anbu Selvi Daniel Raj | Mrs. Manju Martin |
| Mrs. Aspin Bejo | Mrs. Mary Praveena Gobinath |
| Mrs. Boopathi Baskar | Mrs. Nisha Rajan |
| Mrs. Evangelin Yesudhas | Mrs. Percy Jean |
| Mrs. Felsi Rani John | Mrs. Priyadarsini Kanagavel |
| Mrs. Golden Irene Sheeja Robin | Mrs. Sarah Rajasingh |
| Mrs. Jenshy N. Lenin | Mrs. Sathya Priya Ramesh |
| Mrs. Jeya Rani Victor | Mrs. Shiney Johan |
| Mrs. Josephin Anto Kingston | Mrs. Thamari Johnson |
| Mrs. Juslin Jaslin | Mrs. Vanitha Rani Prince |
| Mrs. Leela Gladson | Mrs. Virgin Jegatha Jino |

## ஜுலை 2021 மாத கேள்விகள்

### (ஏசாயா 41 முதல் 50 முடிய)

1. புதையல்கள் எங்கு இருக்கும்?
2. துன்மார்க்கருக்கு என்ன இல்லையென்று கர்த்தர் சொல்லுகிறார்?
3. கர்த்தருடைய நாமத்தை எத்திசையிலிருந்து தொழுதுகொள்ளுவான்?
4. வானங்களை அளவிட்டது எது?
5. கர்த்தருடைய துதி யாருக்கு கொடுக்கப்படாது?
6. நீர்க்கால்களின் ஓரத்தில் வளரும் செடி எது?
7. யாரால் கொள்ளையிடப்பட்டதும் விடுதலையாக்கப்படும்?
8. விக்கிரகங்களை உருவாக்குகிறவர் யார்?
9. உராய்ஞ்சுகிற பட்சி எங்கிருந்து வரும்?
10. எதற்கு முன்னே நான் இருக்கிறேன் என்று கர்த்தர் சொல்லுகிறார்?
11. ராஜ்யங்களின் நாயகியென்று யார் அழைக்கப்படுவதில்லை?
12. தீவுகள் எதற்கு காத்திருக்கும்?
13. நதியைப்போலும், சமுத்திரத்தின் அலைகளைப்போலும் இருப்பது எது?
14. யார் யாரை பூச்சியே, சிறுகூட்டமே என்று கர்த்தர் அழைக்கிறார்?
15. அம்பறாத்துணியிலே மூடிவைக்கப்படுவது எது?
16. கர்த்தர் எதை முக்கியப்படுத்தி மகிமையுள்ளதாக்குவார்?
17. கர்த்தருக்கு சித்தமானதை பாபிலோனில் செய்பவன் யார்?
18. யாருக்கு சமயத்திற்கேற்ற வார்த்தை சொல்ல, கல்விமானின் நாவை கர்த்தர் கொடுத்தார்?
19. சுகந்த பட்டையை எதினால் கொள்ளலாம்?
20. காற்றும், வெறுமையுமாய் ஒப்பிடப்படுவது எது?

## ஜுன் 2021 மாத திருமறை அறிவு போட்டிக்கான விடைகள்

1. மெரோதாக்பலாதான் - ஏசாயா 39:1
2. எகிப்து – ஏசாயா 36:6
3. அசீரியன் - ஏசாயா 31:8
4. ரப்சாக்கே (ஏசாயா 37:4), சனகெரிப் (ஏசாயா 37:17)
5. கன்னான் - ஏசாயா 40:19
6. லோபி – ஏசாயா 32:5
7. முடவன் - ஏசாயா 35:6
8. சீயோன் - ஏசாயா 33:20
9. அத்திப்பழத்து அடை – ஏசாயா 38:21
10. திராக்கா – ஏசாயா 37:9
11. போஸ்றா – ஏசாயா 34:6
12. எசேக்கியா – ஏசாயா 37:14
13. கொள்ளை – ஏசாயா 33:4
14. 1,85,000 – ஏசாயா 37:36
15. வானங்கள் - ஏசாயா 34:4
16. குமாரராகிய அத்ரமலேக், சரேத்சேர் - ஏசாயா 37:37-38
17. கழுகுகளைப்போல – ஏசாயா 40:31
18. கெபிகளாகும் - ஏசாயா 32:14
19. யோவாக் - ஏசாயா 36:3
20. பட்சிகளைப்போல – ஏசாயா 31:5

## ஜுன் மாத திருமறை போட்டிக்கு சரியான விடை எழுதியவர்கள்

| | |
|---|---|
| Mr. Anu | Mr. Kanagavel |
| Mr. Bejo Nelson | Mr. Lenin Raj |
| Mr. Daniel Raj P. | Mr. Prince J. P. |
| Mr. Jaslin Sundara Kumar | Mr. Rajan V. N. |
| Mr. Jean C. R. Shibin | Mr. Ramesh R. |
| Mr. Jino John | Mr. Robin Devadhas |
| Mr. Johan Pratheep | Mr. Sujith Gladson |
| Mr. Justus Martin | |

May God Bless All

## Birthday Celebrants – July 2021

| | |
|---|---|
| 01st July | Mr. Alex Baskar |
| 02nd July | Mr. C. D. Robin Raj |
| 03rd July | Miss. Meghna Bino, D/o Mr. Bino Vetharaja Singh |
| 04th July | Mrs. Saja, W/o Mr. Arun Paul |
| 05th July | Mr. Jesiel Edward, S/o Mr. Micheal |
| 06th July | Miss. Shana Melanie, D/o Mr. Mohan Babu |
| 07th July | Miss. Gabinna Nissi, D/o Mr. Prem Vijins |
| 11th July | Mr. Lenin Raj |
| 13th July | Mrs. Nisha, W/o Mr. Broosewelt |
| 13th July | Mrs. T. Pavithra, W/o Mr. D. Ahigen Paul |
| 16th July | Mr. John Jacob |
| 17th July | Mrs. Nithiya, W/o Mr. Atheesh |
| 17th July | Miss. Jovina, D/o Mr. Victor Thaya Singh |
| 18th July | Miss. Dafrena Leah, D/o Mr. C. Sujin |
| 19th July | Mr. Kasiraja |
| 19th July | Mrs. Jeny Sharlin, W/o Mr. Livingston |
| 20th July | Master. Evan B. Moses, S/o Mr. Benny Moses |
| 20th July | Mr. G. Devaraj |
| 21st July | Miss. Jerlin Stelina, D/o Mr. Justus Martin |
| 24th July | Mrs. C. B. Josepin Jeba Sharmy, W/o Mr. Anto Kingston |
| 24th July | Master. Nikhil Broose, S/o Mr. Broosewelt |
| 25th July | Mrs. Golden Irene Sheeja, W/o Mr. Robin Devadhas |
| 25th July | Mr. Jebister, S/o Mr. John Jacob |
| 25th July | Mrs. Shiney, W/o Mr. Johan Pratheep |
| 26th July | Mr. P. Suresh |
| 26th July | Mrs. Mahizha, W/o Mr. Jenkin Raj |
| 30st July | Mr. S. Jones |

## Wedding Day Anniversaries – July 2021

| | |
|---|---|
| 04th July | Mr. Jerin & Mrs. Jenifba |
| 11th July | Mr. Michael & Mrs. Enolia |
| 12th July | Mr. Edward Sam & Mrs. Sheeba |
| 15th July | Mr. Robin Raj & Mrs. Rabboni |



# ஜெபிக்க சில குறிப்புகள்

## திருச்சபைக்கான மன்றாட்டுக் குறிப்புகள்:-

1. போதகருக்காக, குடும்பத்துக்காக, போதகர் விசாவுக்காக, உடல் ஆரோக்கியம், ஊழிய ஆற்றல், உற்சாகமான திருப்பணிகளுக்காக ஜெபிப்போம்.

2. சபை கமிட்டி அங்கத்தினர்களுக்காக, குடும்பத்துக்காக, அவர்கள் பங்களிப்புக்காக, பொறுப்பான ஊழிய செயல்பாடுகளுக்காக ஜெபிப்போம்.

3. அனைத்து கிளை ஊழியங்களுக்காக ஜெபிப்போம்.
   - ஓய்வுநாள் பள்ளி
   - பெண்கள் ஐக்கிய சங்கம்
   - ஆண்கள் ஐக்கிய சங்கம்
   - பாடகர் குழு
   - ஜெபக் குழு

   அனைத்து பொறுப்பாளர்கள், பங்காளர்கள், பங்களிப்புகள், உற்சாகமான செயல்பாடுகள் அதன் ஊழியங்களுக்காக ஜெபிப்போம்.

4. திருச்சபையின் தேவைகள் சந்திக்கப்பட ஜெபிப்போம். ஊழியத் தேவைகள் தடையின்றி இறைமக்களால் சந்திக்கப்பட, இறை ஊழியங்களின் தடைகள் நீங்க பாரத்தோடு ஜெபிப்போம்.

5. திருச்சபையில் ஒற்றுமையாய் செயல்படுவதன்மூலம் உருவாகும் இறை ஆசி அனைவரும் பெற்றுக்கொள்ளவும், அனைத்து இறைமக்களும் உண்மையான இறைவார்த்தையை உணரவும், எல்லாத் தடைகளையும் தாண்டி ஒருமைப்பாடு ஏற்படுவதன் மூலம் திருச்சபை இன்னும் கட்டி எழுப்பப்படவேண்டும் என பாரத்தோடும் ஜெபிப்போம்.

## மிஷனெரி பணிகளுக்கான மன்றாட்டுக் குறிப்புகள்:-

1. நமது திருச்சபையால் தாங்கப்பட்டுவரும் 11 மிஷனெரிகளுக்காக, அவர்கள் குடும்பங்களுக்காகவும், அவர்கள் பாதுகாப்பிற்காகவும், நல்வாழ்வுக்காகவும் ஜெபிப்போம்.

2. மிஷனெரிகளின் பணித்தளங்களுக்காக, பணித்தளத்தில் செய்யப்படும் ஊழியங்களுக்காக, ஊழியக்களத்தில் அநேக ஆத்துமாக்கள் அறுவடைச் செய்யப்பட மன்றாடுவோம்.

3. மலை நாடுகளில் செய்யப்படும் திருப்பணிகளுக்காக, வடநாடுகளில் நற்செய்தி பணி செய்வோருக்காக, ஆண்டவரை அறியாத முரட்டாட்டமான மக்கள் மத்தியில் இறைபணி செய்வோருக்காக மன்றாடுவோம்.

4. பணித்தளங்களின் தேவைகள் அரசாலும், நிறுவனங்களாலும், மக்களாலும் தாங்கப்பட ஜெபிப்போம்.

5. மக்களின் மனமாற்றத்திற்காகவும், இயேசு கிறிஸ்துவை சொந்த இரட்சகராக ஏற்றுக்கொண்டு அறிக்கையிட்டு மனந்திரும்ப பாரத்தோடு வேண்டுதல் செய்வோம். எதிர்ப்புகள் மாறவும், எதிராளிகள் மனந்திரும்பவும், எழுப்புதல் உண்டாகவும் மன்றாடுவோம்.

## ஓமான் தேசத்திற்கான மன்றாட்டுக் குறிப்புகள்:-

1. ஓமான் தேசத்திற்காக, தேசத்தின் ராஜாவுக்காக, தேசத்தின் மக்களுக்காக, தேசத்தின் ஷேமத்திற்காக ஜெபிப்போம்.

2. பொருளாதார வீழ்ச்சியிலிருந்து விடுபட்டு மக்கள் வேலைவாய்ப்புகள் பெருகவும், நிறுவனங்கள் சிறப்பாய் செயல்படவும், பாதிப்புகள் மாறவும் மக்கள் வாழ்வாதாரங்கள் பெருகவும் மன்றாடுவோம்.

3. பணியாளர் குறைப்பு, ஊதிய குறைப்பு, பணிநேர குறைப்பு போன்றவை மாற்றமடைந்து பொருளாதார செழிப்பு ஏற்பட்டு மக்கள் வாழ்வு ஆசீர்வதிக்கப்பட ஜெபிப்போம்.

4. கொடிய வியாதிகள், கொடிய விபத்துக்கள், புதிய சட்டத்திட்டங்கள், தேசத்தின் மாற்றங்கள் வாழ்வு தேடி வந்துள்ள மக்களுக்கு எந்த பாதிப்பும் ஏற்படுத்தாதபடி மக்கள் அனைவரும் இறைபாதுகாப்பு பெற்றுக்கொள்ள வேண்டுதல் செய்வோம்.

5. தேசத்தின் காலநிலை மாற்றங்கள், சூழ்நிலை மாற்றங்கள் மக்களுக்கு பாதிப்பு ஏற்படுத்தாதபடி இறைஅன்பை உணர மன்றாடுவோம்.

## இந்திய தேசத்திற்கான மன்றாட்டுக் குறிப்புகள்:-

1. **புதிதாக தேர்தல் மூலம் தெரிந்தெடுக்கப்பட்ட ஆட்சியாளர்கள் மத சார்பின்மையோடு சிறப்பாக ஆட்சிபுரிய ஜெபிப்போம்.**

2. அனைத்து தலைவர்களுக்காக, அதிகாரிகளுக்காக, ஆட்சியாளர்களுக்காக, பணியாளர்களுக்காக, மன்றாடுவோம். அனைவரும் சேவை மனப்பான்மையோடு தங்கள் பணிகளை மேற்க்கொள்ள ஜெபிப்போம்.

3. மது, லஞ்சம், ஊழல், கொலை, கொள்ளை, விபத்துக்கள், தற்கொலைகள், கடத்தல்கள் தேசத்தைவிட்டு நீங்கவும், மக்கள் சமாதானமாக வாழவும் மன்றாடுவோம்.

4. பொருளாதார வீழ்ச்சி, வேலையின்மை, கடன்பிரச்சனை, கொடிய வியாதிகள், இயற்கையின் அழிவுகளிலிருந்து தேசம் காக்கப்படும்படியாய் வேண்டுதல் செய்வோம்.

5. பாகிஸ்தான், சீனா, நேபாள எல்லைப்பகுதிகளின் பாதுகாப்புக்காகவும், எல்லை பாதுகாப்பு பணியில் ஈடுபட்டிருக்கும் அதிகாரிகளுக்காகவும் மன்றாடுவோம். நாடுகளுக்கிடையே நல்லிணக்கம் ஏற்பட்டு சமாதானத்தின் தேசமாய் இந்திய தேசம் திகழ ஜெபிப்போம்.

## குடும்பத்திற்கான மன்றாட்டுக் குறிப்புகள்:-

1. குடும்ப சமாதானத்திற்காகவும், குடும்பங்களின் நல்வாழ்வுக்காகவும், குடும்பங்களின் பாதுகாப்புக்காகவும், குடும்பங்களின் ஆசீர்வாதத்துக்காகவும் ஜெபிப்போம்.

2. கடன்பிரச்சனை, வேலையின்மை, பொருளாதார நெருக்கடி, வறுமை நிலை, இல்லக் கட்டுமான பணி தோய்வு, சம்பள இழப்புகள், விசா பிரச்சனைகள், வழக்குகள் நீங்கும்படியாய் ஜெபிப்போம்.

3. சிறுபிள்ளைகள் காக்கப்படவும், வாலிப பிள்ளைகள் கல்விக்காகவும், உயர்கல்வி, திருமணம், வேலைவாய்ப்புகள் பெற்றுக்கொள்ளவும் கடவுள் பயத்தோடும், இறை ஆசியோடும் வாழ மன்றாடுவோம்.

4. வாழ்க்கைத்துணை, குடும்ப அங்கத்தினர்கள், சகோதர, சகோதரிகள், பெற்றோர், பிள்ளைகள் நல்வாழ்வு பெறவும், குடும்பமாய் இறை நாமத்தை மகிமைப்படுத்தவும் மன்றாடுவோம்.

5. குழந்தை வேண்டியிருப்போர், குழந்தை பேற்றிற்காக காத்திருப்போர், நெடுந்தூரம் பயணப்படுவோர், கடினமான பணிகளைச் செய்வோர், தனிமையிலிருப்போர், வியாதியிலிருப்போர், சிறையிருப்பிலுள்ளோர் விடுதலையையும், இறை ஆற்றலையும் பெற்றுக்கொள்ள மன்றாடுவோம்.

## சிறப்பு இறைவேண்டல்

அன்புடையீர்,

உலகையே அச்சுறுத்திக்கொண்டிருக்கும் மிகப்பெரியத் துன்பம் கொரோனா என்னும் வைரஸ் மற்றும உருமாற்றம் அடைந்த கொரோனா வைரஸ். இந்தக் கொடியக் கொள்ளைநோய் பலரின் வாழ்வை அழித்துள்ள நிலையில், உலகமே இந்த வைரஸின் துன்பத்தை எண்ணி அச்சமுடன் உள்ளது. இந்தத் துன்பம் அடியோடு அகலவும் மக்கள் அமைதியுடனும், நலமுடன் வாழவும் அனைவரும் தங்கள் இல்லங்களில் குடும்பமாகக் கூடி உபவாசத்துடன் இறைவேண்டல் செய்ய அன்புடன் கேட்டுக்கொள்கிறேன்.

**இறைவேண்டல் குறிப்புகள்:-**

1. **"ஆபத்துக்காலத்தில் என்னை நோக்கிக் கூப்பிடு; நான் உன்னை விடுவிப்பேன், நீ என்னை மேன்மைப்படுத்துவாய். சங். 50:15"** கஷ்ட நோய்ப்படுக்கையில் விடுதலைக்காய் கர்த்தரை நோக்கி மன்றாடும் ஒவ்வொரு இறைமக்களுக்காக இறைவேண்டல் புரிவோம். கோவிட்-19 நோய் அறிகுறியால் தனிமைப்படுத்தப்பட்டு உணவு பராமரிப்பு இல்லாமல் அழுது கொண்டிருக்கும் மக்களை அரசும், திருச்சபைகளும் அடையாளம் கண்டு ஆதரவு தரும்படியாய் இறைவேண்டல் புரிவோம். மிக விரைவாக மருந்து அனைத்து மக்களுக்கும் தரப்பட்டு நோய்தொற்று முற்றிலும் நீங்கும்படியாய் மரணத்தின் பிடியிலிருந்து மக்கள் காக்கப்படும்படியாய் இறைவேண்டல் புரிவோம்.
2. கோவிட்-19 என்னும் கொடும் நோய் கண்டு அஞ்சாமல் தங்கள் பணிகளை உண்மையாய் நிறைவேற்றும் மருத்துவர்கள், தாதியர்கள், மருத்துவ உதவியாளவர்கள், சுகாதர துறை ஊழியர்கள், தூய்மை பணியாளர்கள், காவல்துறையினர் மற்றும் இப்பணியில் நேரிடையாக தங்களை இணைத்துள்ள அனைத்து ஊழியர்களுக்காகவும் இறைவேண்டல் புரிவோம்.
3. கொரோனா என்னும் கொடிய வைரஸ் நோயால் ஏற்பட்டுள்ள பொருளாதாரச் சரிவிலிருந்து நாடுகள் மீண்டுவரவும்......
4. இந்தியா தேசத்திலும் நாம் வாழுகின்ற ஒமான் தேசத்திலும் இந்த வைரஸ் வேகமாக பரவிவருகிறது. அதன் வீரியம் குறைந்து தேசத்தின் அனைத்து மக்களும் பாதுகாக்கப்படவும்....

குடும்பமாக வீட்டில் இருக்கிற நாட்களில் கர்த்தரை அதிகமாக தேடவும், தேவ சமாதானம் குடும்பத்தை ஆளுகை செய்யவும்....

**இணைந்து மன்றாடுவோம்!** **இனிய வாழ்வு பெறுவோம்!!**

# அனுதின மன்னா – ஜூலை 2021

அன்பர்களே! கிறிஸ்து இயேசுவின் நாமத்தில் வாழ்த்துக்கள்.

தினமும் திருமறை வாசிக்கும் பழக்கம் உங்களிடத்தில் இருக்கிறதா? இல்லையேல் இன்றே வாசிக்க தீர்மானம் எடுங்கள். கர்த்தர்தாமே உங்கள் ஒவ்வொருவரையும் அவரது வார்த்தையினால் போஷித்து உங்களை ஆசீர்வதிப்பாராக. திருமறைப்பகுதியை வாசித்து குடும்ப ஜெபத்தில் தனி ஜெபத்தில் தியானித்து ஓராண்டில் பயனடையுங்கள்.

| தேதி | நாள் | திருமறைப்பாடம் | அனுதின மன்னா | ஓராண்டில் திருமறை |
|---|---|---|---|---|
| ஜுலை 1 | வியாழன் | லேவி. 26:1-13 | லேவி. 26:9 | சங். 146-150 |
| **ஜுலை 2** | **வெள்ளி** | **யோசுவா 4:1-9** | **யோசுவா 4:7** | **நீதி. 1-3** |
| ஜுலை 3 | சனி | 1சாமு. 23:1-18 | 1சாமு. 23:18 | நீதி 4-6 |
| ஜுலை 4 | ஞாயிறு | லூக்கா 19:11-27 | லூக்கா 19:17 | நீதி 7-9 |
| ஜுலை 5 | திங்கள் | எசேக். 33:1-7 | எசேக். 33:7 | நீதி 10-12 |
| ஜுலை 6 | செவ்வாய் | ஆதி. 4:1-10 | ஆதி. 4:9 | நீதி. 13-15 |
| ஜுலை 7 | புதன் | மத். 25:14-30 | மத். 25:23 | நீதி. 16-19 |
| ஜுலை 8 | வியாழன் | யாத். 24:1-7 | யாத். 24:7 | நீதி. 20-22 |
| **ஜுலை 9** | **வெள்ளி** | **ஆதி. 17:1-8** | **ஆதி. 17:4** | **நீதி. 23-25** |
| ஜுலை 10 | சனி | ஆதி. 45:1-8 | ஆதி. 45:7 | நீதி. 26-31 |
| ஜுலை 11 | ஞாயிறு | யாத். 3:1-12 | யாத். 3:10 | பிரசங்கி 1-4 |
| ஜுலை 12 | திங்கள் | எரே. 31:33-34 | எரே. 31:33 | பிரசங்கி 5:9 |
| ஜுலை 13 | செவ்வாய் | அப். 3:19-26 | அப். 3:25 | பிரசங்கி 10-11 |
| ஜுலை 14 | புதன் | யோவா. 21:15-18 | யோவா. 21:15 | உன்னத. 1-4 |
| ஜுலை 15 | வியாழன் | யாத். 2:23-25 | யாத். 2:24 | உன்னத. 5-8 |
| **ஜுலை 16** | **வெள்ளி** | **யோவா. 4:30-38** | **யோவா. 4:34** | **ஏசாயா 1-3** |

| தேதி | நாள் | திருமறைப்பாடம் | அனுதின மன்னா | ஓராண்டில் திருமறை |
|---|---|---|---|---|
| ஜுலை 17 | சனி | பிலி. 4:10-20 | பிலி. 4:12 | ஏசாயா 4-10 |
| ஜுலை 18 | ஞாயிறு | மத். 5:13-16 | மத். 5:14 | ஏசாயா 11-14 |
| ஜுலை 19 | திங்கள் | 2இராஜா. 23:1-3 | 2இராஜா. 23:3 | ஏசாயா 15-19 |
| ஜுலை 20 | செவ்வாய் | 1பேதுரு 3:14-22 | 1பேதுரு 3:21 | ஏசாயா 20-24 |
| ஜுலை 21 | புதன் | ஏசாயா 55:1-6 | ஏசாயா 55:3 | ஏசாயா 25-28 |
| ஜுலை 22 | வியாழன் | எபி. 8:1-10 | எபி. 8:6 | ஏசாயா 29:31 |
| **ஜுலை 23** | **வெள்ளி** | **லூக். 21:5-19** | **லூக். 21:19** | **ஏசாயா 32-35** |
| ஜுலை 24 | சனி | 1சாமு. 12:1-5 | 1சாமு. 12:4 | ஏசாயா 36-37 |
| ஜுலை 25 | ஞாயிறு | கலா. 6:11-18 | கலா. 6:17 | ஏசாயா 38-40 |
| ஜுலை 26 | திங்கள் | 2கொரி. 3:1-6 | 2கொரி. 3:6 | ஏசாயா 41-43 |
| ஜுலை 27 | செவ்வாய் | லூக். 16:1-9 | லூக். 16:8 | ஏசாயா 44-47 |
| ஜுலை 28 | புதன் | 1பேதுரு 4:8-11 | 1பேதுரு 4:10 | ஏசாயா 48-51 |
| ஜுலை 29 | வியாழன் | 1கொரி. 4:1-5 | 1கொரி. 4:2 | ஏசாயா 52-55 |
| **ஜுலை 30** | **வெள்ளி** | **2சாமு. 12:1-10** | **2சாமு. 12:7** | **ஏசாயா 56-58** |
| ஜுலை 31 | சனி | லூக். 22:39-44 | லூக். 22:42 | ஏசாயா 59-64 |
| ஆகஸ்ட் 1 | ஞாயிறு | ஏசாயா 6:1-8 | ஏசாயா 6:8 | ஏசாயா 65-66 |
| ஆகஸ்ட் 2 | திங்கள் | யாத். 12:21-28 | யாத். 12:27 | எரேமியா 1-4 |
| ஆகஸ்ட் 3 | செவ்வாய் | 2கொரி. 3:12-18 | 2கொரி. 3:17 | எரேமியா 5-8 |
| ஆகஸ்ட் 4 | புதன் | யோவா. 8:31-41 | யோவா. 8:32 | எரேமியா 9-11 |
| ஆகஸ்ட் 5 | வியாழன் | அப். 9:10-18 | அப். 9:16 | எரேமியா 12-14 |

**கர்த்தருடைய வேதம் குறைவற்றதும் ஆத்துமாவை உயிர்ப்பிக்கிறதுமாயிருக்கிறது. கர்த்தருடைய சாட்சி சத்தியமும் பேதையை ஞானியாக்குகிறதுமாயிருக்கிறது (சங்கீதம் 19:7).**

# ஆராதனை ஒழுங்குகள்

| | |
|---|---|
| பிரதி மாதம் முதல் தேதி | அருணோதய ஆராதனை<br>நேரம் : அதிகாலை 5:00 – 6:00<br>இடம் : மார்த்தோமா ஹால் |
| முதல் மற்றும் மூன்றாம் வெள்ளி | பரிசுத்த நற்கருணை ஆராதனை<br>நேரம் : மாலை 4:45 – 6:45<br>இடம் : **C.S.I.** மலையாளம் ஹால் |
| இரண்டு, நான்கு மற்றும் ஐந்தாம் வெள்ளி | மாலை ஆராதனை<br>நேரம் : மாலை 4:45 – 6:45<br>இடம் : **C.S.I.** மலையாளம் ஹால் |
| முதல் வியாழன் | இரவு ஜெபக் கூடுகை<br>நேரம் : இரவு 9:00 – 11:00<br>இடம் : **C.S.I.** மலையாளம் ஹால் |
| இரண்டாம் சனி | உபவாச ஜெபக் கூடுகை<br>நேரம் : காலை 10:30 – 1:00 |
| மூன்றாம் வியாழன் | பெண்கள் ஐக்கிய சங்க கூடுகை<br>நேரம் : இரவு 9:00 – 11:00<br>இடம் : **C.S.I.** மலையாளம் ஹால் |
| மூன்றாம் வியாழன் | ஆண்கள் ஐக்கிய சங்க கூடுகை<br>நேரம் : இரவு 9:00 – 11:00<br>இடம் : மார்த்தோமா ஹால் |

திருமறை பள்ளி வகுப்புகள் - எல்லா வெள்ளிக்கிழமைகளிலும் மாலை 4:45 முதல் 5:45 மணி வரை நடைபெறும்.

பாடகர் குழு பயிற்சி - எல்லா வெள்ளிக்கிழமைகளிலும் மாலை 7:00 முதல் 8:00 மணி வரை நடைபெறும்


**Contact: Rev. Dr. N. Jesin**

**GSM : 9693 3489**

**Land Line : 2470 5784**

**E-mail : csitco@gmail.com**

**www.csitamilchurchoman.org**



**(For Private Circulation Only)**